எழுத்தைக் கூட்டுங்கள்! வார்த்தையைச் சொல்லுங்கள்!

# தேசிய அளவிலான தமிழ் எழுத்துக்கூட்டும் போட்டி 2023

## 100 திருக்குறள்கள்

*ஒளிரும் நட்சத்திரங்கள் பிரிவு (18 வயதுக்கு பேற்பட்டோர்)*

# NATIONAL TAMIL SPELLING BEE CONTEST 2023 WORDS LIST

*THE SHINING STARS DIVISION (18 YEARS OLD & ABOVE)*

**தேசிய அளவிலான தமிழ் எழுத்துக்கூட்டும் போட்டி 2023 | சொற்கள் பட்டியல் மற்றும் போட்டி விதிமுறைகள்**

1. இப்பட்டியலில் திருவள்ளுவரின் 100 திருக்குறள்கள் இடம்பெற்றுள்ளன.
2. இச்சொற்கள் பட்டியலில் புண்படுத்தும் வார்த்தைகள் ஏதும் இடம்பெறவில்லை.
3. போட்டியாளர்கள் இத்திருக்குறள் பட்டியலிலுள்ள சொற்கள்/சொற்றொடர்கள்/வரிகளை மட்டுமே எழுத்துக் கூட்ட வேண்டும். முழுமையான திருக்குறள் கேட்கப்படாது. அவற்றைச் சரியாக சொல்லத் தவறும் போட்டியாளர்கள் தகுதி நீக்கம் செய்யப்படுவர்.
4. சொற்கள்/சொற்றொடர்கள்/வரிகளை மட்டுமே சரியான வரிசைப்படி எழுத்துக் கூட்ட வேண்டும்; இடைவெளிகளைக் கவனத்தில் கொள்வது அவசியம். நிறுத்தற்குறிகளைக் குறிப்பிடத் தேவையில்லை.
5. போட்டியில் குறிப்புகள் எதுவும் கொடுக்கப்படாது. தமிழ் மற்றும் ஆங்கில விளக்கங்கள் போட்டியாளர்களின் கூடுதல் தகவலுக்காக வழங்கப்பட்டுள்ளன.
6. உச்சரிக்கப்படும் சொற்கள்/சொற்றொடர்கள்/வரிகளைக் கவனமாகக் கேட்க வேண்டும். பின், போட்டியாளர்கள் சொற்கள்/சொற்றொடர்கள்/வரிகளைச் சரியாகவும், விரைவாகவும் எழுத்துக் கூட்ட வேண்டும்.
7. போட்டியாளர்கள் போட்டியின் போது சொற்கள் பட்டியலின் நகலை வைத்திருக்கவோ, மென்நகலைப் பயன்படுத்தவோ அல்லது மற்ற குறிப்புகளைப் பயன்படுத்தவோ அனுமதிக்கப்படமாட்டர்.
8. போட்டியில் சொற்களின் கடின நிலை இந்த காரணிகளின் அடிப்படையில் மாறுபடும்:
   அ) பங்கேற்பாளர்களின் பிரிவு ஆ) போட்டியின் சுற்றுகள்.
9. போட்டி இயங்கலைவழி நடத்தப்படுவதால் போட்டியாளர்கள் ஸ்பீக்கர், மைக்ரோஃபோன் மற்றும் நிலையான இணைய இணைப்பு கொண்ட லேப்டாப் / பிசி / ஐபாட் / தொலைபேசி) இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
10. விதிமுறைகளைப் பின்பற்றாத போட்டியாளர்கள் தகுதி நீக்கம் செய்யப்படுவர்.
11. எந்த நேரத்திலும் போட்டியின் சொற்கள், தகவல்கள், விதிமுறைகள், மற்றும் நிரல்களை மாற்றியமைக்க ஏற்பாட்டுக் குழுவினருக்கு உரிமை உள்ளது.
12. போட்டியில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் அவ்வப்போது அறிவிக்கப்படும்.

## TAMIL SPELLING BEE CONTEST 2023 | WORDS LIST & CONTEST RULES & REGULATION

1. There are 100 Tirukkural of Thiruvalluvar in this list.
2. The words list does not include words that are offensive.
3. Participants must only spell the words/phrases/line in the Tirukural according to our list only. Do not need to spell the whole one Tirukural. Participants spell word incorrectly will be eliminated from the competition.
4. We will judge the participant's spelling based on the order of the letters; and it is required to indicate the spaces if applicable It's not required to indicate special characters.
5. There will be no hints given in the competition. Tamil and English descriptions are provided for participants' reference. .
6. Participants must listen words/phrases/line pronounced, then spell the words/phrases/line fast and precisely.
7. Participants are not allowed to hold the hardcopy of the words list, use the softcopy, or use other sources of words during the competition.
8. The difficulty level of the words/phrases will vary based on these factors:
   a) the age of the speller b) the level of the competition.
9. Participants should make sure that the supporting equipment and devices are available and are functioning well. (Laptop/PC/Ipad/Phone with a functioning camera and speaker, microphone, and a stable internet connection).
9. 10.The organizer reserves the right to disqualify the participants if they don't follow the rules.

11.The organizer also reserves the right to modify all the words, information, rules, and regulations of the contest at any time

12.Any changes on the contest will be notified from time to time.

# உயிர் எழுத்துக்கள் | வல்லின எழுத்துக்கள்

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| akh | a | aa | i | ii | u | uu | e | Ee | ai | o | oo | au |
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| iK | ka | kaa | ki | kii | ku | kuu | ke | Kee | kai | ko | koo | kau |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| iC | sa | saa | si | sii | su | suu | se | See | sai | so | soo | sau |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| iD | da | daa | di | dii | du | duu | de | Dee | dai | do | doo | dau |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| iT | ta | taa | ti | tii | tu | tuu | te | Tee | tai | to | too | tau |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| iP | pa | paa | pi | pii | pu | puu | pe | Pee | pai | po | poo | pau |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| iR | ra | raa | ri | rii | ru | ruu | re | Ree | rai | ro | roo | rau |

| உயிர் எழுத்துக்கள் \| மெல்லின எழுத்துக்கள் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| akh | a | aa | i | ii | u | uu | e | ee | ai | o | oo | au |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| iNG | nga | ngaa | ngi | ngii | ngu | nguu | nge | ngee | ngai | ngo | ngoo | ngau |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| iNJ | nya | nyaa | nyi | nyii | nyu | nyuu | nye | nyee | nyai | nyo | nyoo | nyau |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| iN | na | naa | ni | nii | nu | nuu | ne | nee | nai | no | noo | nau |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |
| iN | na | naa | ni | nii | nu | nuu | ne | nee | nai | no | noo | nau |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| iM | ma | maa | mi | mii | mu | muu | me | mee | mai | mo | moo | mau |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| iNT | na | naa | ni | nii | nu | nuu | ne | nee | nai | no | noo | nau |

# உயிர் எழுத்துக்கள் | இடையின எழுத்துக்கள்

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| akh | a | aa | i | ii | u | uu | e | ee | ai | o | oo | au |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| iY | ya | yaa | yi | yii | yu | yuu | ye | yee | yai | yo | yoo | yau |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| iR | ra | raa | ri | rii | ru | ruu | re | ree | rai | ro | roo | rau |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| iL | la | laa | li | lii | lu | luu | le | lee | lai | lo | loo | lau |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| iV | va | vaa | vi | vii | vu | vuu | ve | vee | vai | vo | voo | vau |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| iL | la | laa | li | lii | lu | luu | le | lee | lai | lo | loo | lau |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| iZH | zha | zhaa | zhi | zhii | zhu | zhuu | zhe | zhee | zhai | zho | zhoo | zhau |

| | |
|---|---|
| 1 | **அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**<br>**பகவன் முதற்றே உலகு (1)**<br><br>எழுத்துகள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. As the letter A is the first of all letters, so the eternal God is first in the world. |
| 2 | **அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**<br>**பிறஆழி நீந்தல் அரிது (8)**<br><br>அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்ற கடல்களைக் கடக்க முடியாது. None can swim the sea of vice, but those who are united to the feet of that gracious Being who is a sea of virtue. |
| 3 | **அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**<br>**புண்கண்நீர் பூசல் தரும் (71)** |

| | |
|---|---|
| | நம்மிடம் தோன்றும் அன்பை அடைத்து வைக்க பூட்டு என்று எதுவுமில்லை. சக மனிதரின் துன்பம் கண்டபொழுது, நம் கண்களில் கண்ணீர் பெருகுவதே நாம் உள்ளத்தில் கொண்டிருக்கும் அன்பை பறைசாற்றும் சிறந்த ஆதாரமாக இருக்கிறது. Is there any fastening that can shut in love? Tears of the affectionate will publish the love that is within. |
| 4 | **அன்பொடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**<br>**என்பொடு இயைந்த தொடர்பு (73)**<br><br>அருமையான உயிர்க்கு உடம்போடு பொருந்தி இருக்கின்ற உறவு, அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன்என்று கூறுவர். They say that the union of soul and body in man is the fruit of the union of love and virtue (in a former birth. |
| 5 | **அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**<br>**நாடி இனிய சொலின் (96)**<br><br>பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிமை உடையச் சொற்களைச் சொல்லின், பாவங்கள் தேய்ந்து குறைய அறம் வளர்ந்து பெருகும். If a man, while seeking to speak usefully, speaks also sweetly, his sins will diminish and his virtue increase. |

| | |
|---|---|
| 6 | **அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்**<br>**புறம்கூறான் என்றல் இனிது (181)**<br><br>ஒரு மனிதன் ஒருபோதும் புண்ணியத்தைக் கொடுக்கும் அறச் செயல்களைப் பற்றி பேசவே மாட்டான். அதற்கு மாறாக பாவத்தைக் கொண்டு வரும் செயல்களைச் செய்பாவனாக இருக்கக்கூடும். எனினும், அவன் உலகத்தாரிடம் புறம் பேசும் பழக்கம் இல்லாதவன் என்கிற பெயரைப் பெறுவது சிறப்பு. Though one do not even speak of virtue and live in sin, it will be well if it be said of him "he does not backbite." |
| 7 | **அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**<br>**பூரியார் கண்ணும் உள (241)**<br><br>இந்த உலகில் கிடைக்க கூடிய செல்வங்களுள் அறிய செல்வமானது உயர்ந்த மனிதர்கள் தங்களின் மனதை எப்போதும் ஆளும் "அருள்' எனப்படும் செல்வமே ஆகும். மற்றபடி அழிந்து போகும் நிலையற்ற பொருட் செல்வங்கள் இந்த உலகில் இழிவான மனிதர்களிடம் கூட இருக்கின்றன. The wealth of kindness is wealth of wealth, in as much as the wealth of property is possessed by the basest of men. |
| 8 | **அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்**<br>**பிறவினை எல்லாம் தரும் (321)** |

| | |
|---|---|
| | மனிதர்கள் செய்யக்கூடிய அறச்செயல்களுள் மிகச்சிறந்த அறச்செயல் யாதெனின் பூமியில் வாழ்கின்ற எந்த ஒரு உயிரையும் கொலை செய்யாமல் இருப்பதுதான். மாறாக பிற உயிர்களைக் கொள்ளும் நபர் அனைத்து விதமான தீவினை பயன்களையும், அவரது வாழ்வில் அனுபவிக்க நேரிடும். Never to destroy life is the sum of all virtuous conduct. The destruction of life leads to every evil. |
| 9 | **அறிவற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்**<br>**உள்ளழிக்கல் ஆகா அரண் (421)**<br><br>அறிவு அழிவு வராமல் காக்கும் கருவியாகும், அன்றியும் பகைகொண்டு எதிர்ப்பவர்க்கும் அழிக்க முடியாத உள்ளரணும் ஆகும். Wisdom is a weapon to ward off destruction; it is an inner fortress which enemies cannot destroy. |
| 10 | **அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**<br>**அஃதுஅறி கல்லா தவர் (427)**<br><br>அறிவுடையோர் எதிர்காலத்தில் நிகழப்போவதை முன்னே எண்ணி அறியவல்லார், அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவர். The wise are those who know beforehand what will happen; those who do not know this are the unwise. |

| | |
|---|---|
| 11 | **அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது**<br>**அஞ்சல் அறிவார் தொழில் (428)**<br><br>அஞ்சத்தக்கதைக் கண்டு அஞ்சாதிருப்பது அறியாமையாகும், அஞ்சத் தக்கதைக் கண்டு அஞ்சுவதே அறிவுடையவரின் தொழிலாகும். Not to fear what ought to be feared, is folly; it is the work of the wise to fear what should be feared. |
| 12 | **அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**<br>**என்னுடைய ரேனும் இலர் (430)**<br><br>அறிவுடையவர் (வேறொன்றும் இல்லாதிருப்பினும்) எல்லாம் உடையவரே ஆவர், அறிவில்லாதவர் வேறு என்ன உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர். Those who possess wisdom, possess everything; those who have not wisdom, whatever they may possess, have nothing. |
| 13 | **அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**<br>**திறனறிந்து தேர்ந்து கொளல் (441)** |

SUCCESS Pathway ACADEMY

| | |
|---|---|
| | அறம் உணர்ந்தவராய்த் தன்னை விட மூத்தவராய் உள்ள அறிவுடையவரின் நட்பை, கொள்ளும் வகை அறிந்து ஆராய்ந்து கொள்ள வேண்டும். Let (a king) ponder well its value, and secure the friendship of men of virtue and of mature knowledge. |
| 14 | **அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**<br>**பேணித் தமராக் கொளல் (443)**<br><br>பெரியாரைப் போற்றி தமக்குச் சுற்றத்தாராக்கிக் கொள்ளுதல், பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அருமையானதாகும். To cherish great men and make them his own, is the most difficult of all difficult things. |
| 15 | **அழிவின் அவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்**<br>**அல்லல் உழப்பதாம் நட்பு (787)**<br><br>அழிவைத் தரும் தீமைகளிலிருந்து நீக்கி, நல்ல வழியில் நடக்கச் செய்து, அழிவுவந்த காலத்தில் உடனிருந்து துன்பப்படுவதே நட்பாகும். (True) friendship turns aside from evil (ways) makes (him) walk in the (good) way, and, in case of loss if shares his sorrow (with him). |

| | |
|---|---|
| 16 | **அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**<br>**ஐந்துசால்பு ஊன்றிய தூண் (983)**<br><br>அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, என்னும் ஐந்து பண்புகளும், சால்பு என்பதைத் தாங்கியுள்ள தூண்களாகும். Affection, fear (of sin), benevolence, favour and truthfulness; these are the five pillars on which perfect goodness rests. |
| 17 | **அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**<br>**பண்புஉடைமை என்னும் வழக்கு (992)**<br><br>அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்த தன்மை அமைந்திருத்தல் ஆகிய இவ்விரண்டும் பண்பு உடையவராக வாழும் நல்வழியாகும். Affectionateness and birth in a good family, these two constitute what is called a proper behaviour to all. |
| 18 | **அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**<br>**மக்கட்பண்பு இல்லா தவர் (997)** |

| | |
|---|---|
| | மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர் அரம் போல் கூர்மையான அறிவுடையவரானாலும், ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர். He who is destitute of (true) human qualities (only) resembles a tree, though he may possess the sharpness of a file. |
| 19 | **ஆகுஊழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்**<br>**போகுஊழால் தோன்றும் மடி (371)**<br><br>ஒரு மனிதனுக்கு ஆக்கம் தருகின்ற தலைவிதி ஏற்படும் பட்சத்தில், அவனுக்கு மிகுந்த பொருள் ஈட்டுவதற்கான முயற்சி செய்யும் எண்ணம் தோன்றும். அதுபோல ஒரு மனிதனுக்கு, அவனுக்குரிய செல்வம் அழிவதற்கு காரணமான விதி ஏற்படுமானால், அவனுக்கு மிகுந்த சோம்பல் குணம் ஏற்படும். Perseverance comes from a prosperous fate, and idleness from an adverse fate. |
| 20 | **ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்**<br>**ஒருவந்தம் கைத்துஉடை யார் (593)**<br><br>ஊக்கத்தை உறுதியாகத் தம்கைப் பொருளாக உடையவர், ஆக்கம்( இழந்து விட்டக்காலத்திலும்) இழந்து விட்டோம் என்று கலங்க மாட்டார். They who are possessed of enduring energy will not trouble themselves, saying, "we have lost our property." |

| | |
|---|---|
| 21 | **ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**<br>**ஊக்கம் உடையா னுழை (594)**<br><br>சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழிக் கேட்டுக்கொண்டு போய்ச் சேரும். Wealth will find its own way to the man of unfailing energy. |
| 22 | **ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**<br>**மாற்றாரை மாற்றும் படை (985)**<br><br>ஆற்றலுடையவரின் ஆற்றலாவது பணிவுடன் நடத்தலாகும், அது சான்றோர் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றுகின்ற கருவியாகும். Stooping (to inferiors) is the strength of those who can accomplish (an undertaking); and that is the weapon with which the great avert their foes. |
| 23 | **இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**<br>**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் (91)**<br><br>அன்பு கலந்து வஞ்சம் அற்றவைகளாகிய சொற்கள், மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச்சொற்கள் இன்சொற்களாகும். Sweet words are those which imbued with love and free from deceit flow from the mouth of the virtuous. |

| | |
|---|---|
| 24 | **இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே**<br>**கெடுக்கும் தகைமை யவர் (447)**<br><br>கடிந்து அறிவுரைக் கூறவல்ல பெரியாரின் துணை கொண்டு நடப்பவரை கெடுக்கும் ஆற்றல் உள்ளவர் எவர் இருக்கின்றனர். Employs, that thunder out reproaches when he errs. Who are great enough to destroy him who has servants that have power to rebuke him? |
| 25 | **இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**<br>**கெடுப்பார் இலானுங் கெடும் (448)**<br><br>கடிந்து அறிவுரைக் கூறும் பெரியாரின் துணை இல்லாதக் காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் கெடுவான். The king, who is without the guard of men who can rebuke him, will perish, even though there be no one to destroy him. |
| 26 | **இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று**<br>**புனையினும் புல்லென்னும் நட்பு (790)** |

| | |
|---|---|
| | இவர் எமக்கு இத்தன்மையானவர், யாம் இவர்க்கு இத்தன்மையுடையேம் என்று புனைந்துரைத்தாலும் நட்பு சிறப்பிழந்து விடும். Though friends may praise one another saying, "He is so intimate with us, and we so much (with him)"; (still) such friendship will appear mean. |
| 27 | **இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்**<br>**என்ன பயத்ததோ சால்பு? (987)**<br><br>துன்பமானவற்றைச் செய்தவர்க்கும் இனிய உதவிகளைச் செய்யா விட்டால், சான்றோரின் சால்பு என்ன பயன் உடையதாகும். Of what avail is perfect goodness if it cannot do pleasing things even to those who have pained (it) ? |
| 28 | **இன்மை ஒருவற்கு இளிவுஅன்று சால்புஎன்னும்**<br>**திண்மைஉண் டாகப் பெறின் (988)**<br><br>சால்பு என்னும் வலிமை உண்டாகப் பெற்றால் ஒருவனுக்குப் பொருள் இல்லாத குறையாகிய வறுமை இழிவானது அன்று. Poverty is no disgrace to one who abounds in good qualities. |
| 29 | **ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது**<br>**ஊதியம் இல்லை உயிர்க்கு (231)** |

| | |
|---|---|
| | இந்த உலகில் நீங்களும் வாழும் காலம் வரை கொடை எனப்படும் தானம் செய்யுங்கள். அப்படி தானம் செய்வதால் புகழ் பெற்று வாழுங்கள். பிறருக்கு தானம் செய்வதால் ஏற்படும் புகழ் மட்டுமே ஒரு உயிருக்கு இந்த பூமியில் கிடைக்கக் கூடிய சிறந்த ஊதியமாக இருக்குமே தவிர, மற்ற எதுவும் இல்லை. Give to the poor and live with praise. There is no greater profit to man than that. |
| 30 | **உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை**<br>**அற்றே தவத்திற்கு உரு (261)**<br><br>பிறரால் தனக்கு ஏற்படக்கூடிய எத்தகைய துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு வாழ்தலும் அதே நேரம் தன்னால் பிற உயிர்களுக்கு எத்தகைய துன்பமும் நேராமல் வாழ்தல் ஆகிய இவை இரண்டு மட்டுமே தவம் செய்தலின் இலக்கணம் ஆகும். The nature of religious discipline consists, in the endurance (by the ascetic) of the sufferings which it brings on himself, and in abstaining from giving pain to others. |
| 31 | **உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**<br>**அனைத்தே புலவர் தொழில் (394)** |

| | |
|---|---|
| | மகிழும் படியாகக் கூடிப்பழகி (இனி இவரை எப்போது காண்போம் என்று ) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும். It is the part of the learned to give joy to those whom they meet, and on leaving, to make them think (Oh! when shall we meet them again.) |
| 32 | **உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**<br>**கடையரே கல்லா தவர் (395)**<br><br>செல்வர் முன் வறியவர் நிற்பது போல் (கற்றவர்முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்விக் கற்றவரே உயர்ந்தவர், கல்லாதவர் இழிந்தவர். The unlearned are inferior to the learned, before whom they stand begging, as the destitute before the wealthy. |
| 33 | **உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்**<br>**கூம்பலும் இல்லது அறிவு (425)**<br><br>உலகத்து உயர்ந்தவரை நட்பாக்கி கொள்வது சிறந்த அறிவு, முன்னே மகிழ்ந்து விரிதலும் பின்னே வருந்திக் குவிதலும் இல்லாத அறிவு. To secure the friendship of the great is true wisdom; it is (also) wisdom to keep (that friendship unchanged, and) not opening and closing (like the lotus flower). |

| | |
|---|---|
| 34 | **உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும்**<br>**பெற்றியார்ப் பேணிக் கொளல் (442)**<br><br>வந்துள்ள துன்பத்தை நீக்கி, இனித் துன்பம் வராதபடி முன்னதாகவே காக்கவல்ல தன்மையுடையவரைப் போற்றி நட்புக் கொள்ள வேண்டும். Let (a king) procure and kindly care for men who can overcome difficulties when they occur, and guard against them before they happen. |
| 35 | **உடையர் எனப்படுவது ஊக்கமஃது இல்லார்**<br>**உடையது உடையரோ மற்று (591)**<br><br>ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும், ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ. Energy makes out the man of property; as for those who are destitute of it, do they (really) possess what they possess? |
| 36 | **உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை**<br>**நில்லாது நீங்கி விடும் (592)** |

| | |
|---|---|
| | ஒருவர்க்கு ஊக்கமுடைமையே நிலையான உடைமையாகும், மற்றப் பொருளுடைமையானது நிலைபேறு இல்லாமல் நீங்கிவிடுவதாகும். The possession of (energy of) mind is true property; the possession of wealth passes away and abides not. |
| 37 | **உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்றுஅது**<br>**தள்ளினும் தள்ளாமை நீர்த்து (596)**<br><br>எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும், அவ்வுயர்வுக் கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது. In all that a king thinks of, let him think of his greatness; and if it should be thrust from him (by fate), it will have the nature of not being thrust from him. |
| 38 | **உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து**<br>**வள்ளியம் என்னும் செருக்கு (598)**<br><br>ஊக்கம் இல்லாதவர் இவ்வுலகில் யாம் வண்மை உடையேம் என்றுத் தம்மைத் தான் எண்ணி மகிழும் மகிழ்ச்சியை அடையமாட்டார். Those who have no (greatness of) mind, will not acquire the joy of saying in the world, "we have excercised liaberality". |

| | |
|---|---|
| 39 | **உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃதுஇல்லார்**<br>**மரம்மக்கள் ஆதலே வேறு (600)**<br><br>ஒருவனுக்கு வலிமையானது ஊக்க மிகுதியே, அவ்வூக்கம் இல்லாதவர் மரங்களே, (வடிவால்) மக்களைப் போல் இருத்தலே வேறுபாடு. Energy is mental wealth; those men who are destitute of it are only trees in the form of men. |
| 40 | **உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**<br>**இடுக்கண் களைவதுஆம் நட்பு (788)**<br><br>உடைநெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக்காப்பது போல் (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்போதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு. (True) friendship hastens to the rescue of the afflicted (as readily) as the hand of one whose garment is loosened (before an assembly). |
| 41 | **உறுப்புஒத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க**<br>**பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு (993)** |

| | |
|---|---|
| | உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புமை அன்று, பொருந்தத்தக்கப் பண்பால் ஒத்திருத்தலே கொள்ளத்தக்க ஒப்புமையாகும். Resemblance of bodies is no resemblance of souls; true resemblance is the resemblance of qualities that attract. |
| 42 | **ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**<br>**ஆழி எனப்படு வார் (989)**<br><br>சால்பு என்னும் தன்மைக்குக் கடல் என்று புகழப்படுகின்றவர், ஊழிக்காலத்தின் வேறுபாடுகளே நேர்ந்தாலும் தாம் வேறுபடாமல் இருப்பர். Those who are said to be the shore of the sea of perfection will never change, though ages may change. |
| 43 | **எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்துஒன்றும்**<br>**கள்ளாமை காக்கதன் நெஞ்சு (281)**<br><br>நம்மை ஒருவரும் எந்த வகையிலும் இகழாமல் இருக்க வேண்டும் என நாம் விரும்பினால், நாம் பிறருக்கு உரிமையான எந்த ஒரு பொருளையும் திருடிக் கொள்ளும் எண்ணம் இல்லாமல் நம் மனதை காக்க வேண்டும். Let him, who desires not to be despised, keep his mind from (the desire of) defrauding another of the smallest thing. |

| | |
|---|---|
| 44 | **எண்ணென்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்**<br>**கண்ணென்ப வாழும் உயிர்க்கு (392)**<br><br>எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர். Letters and numbers are the two eyes of man. |
| 45 | **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**<br>**மெய்ப்பொருள் காண்பது அறிவு (423)**<br><br>எப்பொருளை யார் யார் இடம் கேட்டாலும் (கேட்டவாறே கொள்ளாமல்) அப்பொருளின் மெய்யானப் பொருளைக் காண்பதே அறிவாகும். To discern the truth in everything, by whomsoever spoken, is wisdom. |
| 46 | **எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**<br>**நுண்பொருள் காண்பது அறிவு (424)**<br><br>தான் சொல்லுவன எளிய பொருளையுடையனவாகப் பதியுமாறு சொல்லி, தான் பிறரிடம் கேட்பவற்றின் நுட்பமானப் பொருளையும் ஆராய்ந்து காண்பது அறிவாகும். To speak so as that the meaning may easily enter the mind of the hearer, and to discern the subtlest thought which may lie hidden in the words of others, this is wisdom. |

| | |
|---|---|
| 47 | **எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**<br>**அவ்வது உறைவது அறிவு (426)**<br><br>உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ, உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அவ்வாறு நடப்பதே அறிவாகும். To live as the world lives, is wisdom. |
| 48 | **எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**<br>**அதிர வருவதோர் நோய் (429)**<br><br>வரப்போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும் படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை. No terrifying calamity will happen to the wise, who (foresee) and guard against coming evils. |
| 49 | **ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**<br>**எழுமையும் ஏமாப்பு உடைத்து (398)**<br><br>ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழுபிறப்பிறப்பிலும் உதவும் தன்மை உடையது. The learning, which a man has acquired in one birth, will yield him pleasure during seven births. |

| | |
|---|---|
| 50 | **கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**<br>**நற்றாள் தொழாஅர் எனின் (2)**<br><br>தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன? What Profit have those derived from learning, who worship not the good feet of Him who is possessed of pure knowledge? |
| 51 | **கற்க கசடறக் கற்பவை கற்றபின்**<br>**நிற்க அதற்குத் தக (391)**<br><br>கல்வி கற்க நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும். Let a man learn thoroughly whatever he may learn, and let his conduct be worthy of his learning. |
| 52 | **கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு**<br>**புண்ணுடையர் கல்லா தவர் (393)**<br><br>கண்ணுடையவர் என்றுக் கூறப்படுபவர் கற்றவரே, கல்லாதவர் முகத்தில் இரண்டுப் புண் உடையவர் ஆவார். The learned are said to have eyes, but the unlearned have (merely) two sores in their face. |

| | |
|---|---|
| 53 | **கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து**<br>**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு (981)**<br><br>கடமை இவை என்று அறிந்து சான்றான்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் இயல்பான கடமை என்று கூறுவர். It is said that those who are conscious of their duty and behave with a perfect goodness will regard as natural all that is good. |
| 54 | **குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**<br>**எந்நலத்து உள்ளதூஉம் அன்று (982)**<br><br>சான்றோரின் நலம் என்று கூறப்படுவது அவருடைய பண்புகளின் நலமே, மற்ற நலம் வேறு எந்த நலத்திலும் சேர்ந்துள்ளதும் அன்று. The only delight of the perfect is that of their goodness; all other (sensual) delights are not to be included among any (true) delights. |
| 55 | **கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**<br>**மாடுஅல்ல மற்றை யவை (400)** |

| | |
|---|---|
| | ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும், கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல. Learning is the true imperishable riches; all other things are not riches. |
| 56 | **கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**<br>**சொல்லா நலத்தது சால்பு (984)**<br><br>தவம் ஓர் உயிரையும் கொல்லாத அறத்தை அடிப்படையாகக் கொண்டது, சால்பு பிறருடையத் தீமையை எடுத்துச் சொல்லாத நற்பண்பை அடிப்படையாகக் கொண்டது. Penance consists in the goodness that kills not , and perfection in the goodness that tells not others' faults. |
| 57 | **சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி**<br>**துலையல்லார் கண்ணும் கொளல் (986)**<br><br>சால்புக்கு உரைகல் போல் மதிப்பிடும் கருவி எது என்றால் தமக்கு ஒப்பில்லாத தாழ்ந்தோரிடத்திலும்தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பண்பாகும். The touchstone of perfection is to receive a defeat even at the hands of one's inferiors. |
| 58 | **சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம்தான்**<br>**தாங்காது மன்னோ பொறை (990)** |

| | |
|---|---|
| | சான்றோரின் சால்பு நிறைந்த பண்பு குறைபடுமானால் இந்தப் பெரிய நிலவுலகமும் தன் பாரத்தைத் தாங்க முடியாமற் போய் விடும். If there is a defect in the character of the perfect, (even) the great world cannot bear (its) burden. |
| 59 | **சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே**<br>**மற்றுஇன்பம் வேண்டு பவர் (173)**<br><br>தாம் செய்யும் அறத்தினால் கிடைக்கக்கூடிய நிலையானதாகிய பேரின்பத்தை விரும்புபவர்கள், எந்த சூழ்நிலையிலும் நிலையற்ற சுகபோகங்களை தரும் சிற்றின்பத்தை விரும்பி தவறான செயல்களில் ஈடுபட மாட்டார்கள். Those who desire the higher pleasures (of heaven) will not act unjustly through desire of the trifling joy. (in this life.) |
| 60 | **சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா**<br>**செய்யாமை மாசுஅற்றார் கோள் (311)**<br><br>தீமையான செயல் செய்வதால் வாழ்க்கைக்கு பல சிறப்புகளை தருகின்ற மிகப் பெரும் செல்வம் கிடைப்பதாக இருந்தாலும், பிறருக்கு தீமை செய்யாமல் வாழ்வது என்கிற உயரிய கொள்கையை கொண்டு வாழ்வார்கள் மேல் மக்கள். It is the determination of the spotless not to cause sorrow to others, although they could (by so causing) obtain the wealth which confers greatness. |

| | |
|---|---|
| 61 | **சிதைவுஇடத்து ஒல்கார் உரவோர் புதையம்பின்**<br>**பட்டுப்பாடு ஊன்றும் களிறு (597)**<br><br>உடம்பை மறைக்குமளவு அம்புகளால் புண்பட்டும் யானைத் தன் பெருமையை நிலைநிறுத்தும், அதுபோல் ஊக்கம் உடையவர் அழிவு வந்தவிடத்திலும் தளர மாட்டார். The strong minded will not faint, even when all is lost; the elephant stands firm, even when wounded by a shower of arrows. |
| 62 | **சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்**<br>**சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் (445)**<br><br>தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞரையே உலகம் கண்ணாகக் கொண்டு நடத்தலால், மன்னவனும் அத்தகையாரைக் ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும். As a king must use his ministers as eyes (in managing his kingdom), let him well examine their character and qualifications before he engages them. |
| 63 | **செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**<br>**வானகமும் ஆற்ற லரிது (101)** |

| | |
|---|---|
| | தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருக்கப் பிறன் தனக்கு செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் கைமாறாகக் கொடுத்தாலும் ஈடு ஆக முடியாது. (The gift of) heaven and earth is not an equivalent for a benefit which is conferred where none had been received. |
| 64 | **செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி**<br>**எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து (112)**<br><br>நடுவுநிலைமை உடையவனின் செல்வவளம் அழிவில்லாமல் அவனுடைய வழியில் உள்ளார்க்கும் உறுதியான நன்மை தருவதாகும். The wealth of the man of rectitude will not perish, but will bring happiness also to his posterity. |
| 65 | **செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்லிடத்துக்**<br>**காக்கினென் காவாக்கால் என்? (301)**<br><br>தன் நிலைக்கு குறைந்த நிலையில் இருக்கும் நபர்கள் மீது சினம் வராமல் தடுத்தாட்கொள்பவனே சினம் காப்பவன் என கருதப்படுவான். அதே நேரம் தன்னுடைய சினம் செல்லுபடியாகாத தன்னை விட வலியவர்களிடம் தன்னுடைய சினத்தை வெளிப்படுத்தினாலும் அல்லது வெளிப்படுத்தாமல் மறைத்துக் கொண்டாலும் எந்தவித பயனும் கிடையாது. He restrains his anger who restrains it when it can injure; when it cannot injure, what does it matter whether he restrain it, or not. |

| | |
|---|---|
| 66 | **சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**<br>**நன்றின்பால் உய்ப்பது அறிவு (422)**<br><br>மனத்தை சென்ற இடத்தில் செல்லவிடாமல், தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும். Not to permit the mind to go where it lists, to keep it from evil, and to employ it in good, this is wisdom. |
| 67 | **செயற்குஅரிய யாவுள நட்பின் அதுபோல்**<br>**வினைக்குஅரிய யாவுள காப்பு (781)**<br><br>நட்பைப்போல் செய்து கொள்வதற்கு அருமையானவை எவை உள்ளன, அதுபோல் தொழிலுக்கு அரிய காவலாக இருப்பவை எவை உள்ளன. What things are there so difficult to acquire as friendship? What guards are there so difficult to break through by the efforts (of one's foes) ? |
| 68 | **தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்**<br>**எங்ஙனம் ஆளும் அருள் (251)** |

SUCCESS Pathway ACADEMY

| | |
|---|---|
| | தன்னுடைய உடலை வளர்த்துக் கொள்ள பிற உயிர்களைக் கொன்று அவற்றின் ஊக்ச் சாப்பிடுபவர்களுக்கு எவ்வாறு இறை அருள் கிடைக்கும்? மாறாக பிற உயிர்களைக் கொன்ற பாவம் மட்டுமே அவர்களைச் சேரும். How can he be possessed of kindness, who to increase his own flesh, eats the flesh of other creature. |
| 69 | **தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்**<br>**வன்மையுள் எல்லாம் தலை (444)**<br><br>தம்மைவிட (அறிவு முதலியவற்றால்) பெரியவர் தமக்குச் சுற்றத்தராகுமாறு நடத்தல், வல்லமை எல்லாவற்றிலும் சிறந்ததாகும். So, to act as to make those men, his own, who are greater than himself is of all powers the highest. |
| 70 | **தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்**<br>**செற்றார் செயக்கிடந்தது இல் (446)**<br><br>தக்க பெரியாரின் கூட்டத்தில் உள்ளனவாய் நடக்கவல்ல ஒருவனுக்கு,அவனுடைய பகைவர் செய்யக்கூடியத் தீங்கு ஒன்றும் இல்லை. There will be nothing left for enemies to do, against him who has the power of acting (so as to secure) the fellowship of worthy men. |

| | |
|---|---|
| 71 | **தாமின் புறுவது உலகுஇன் புறக்கண்டு**<br>**காமுறுவர் கற்றறிந் தார் (399)**<br><br>தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக்கல்வியையே) விரும்புவர். The learned will long (for more learning), when they see that while it gives pleasure to themselves, the world also derives pleasure from it. |
| 72 | **தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்**<br>**தீவினை என்னும் செருக்கு (201)**<br><br>தீய வினைகளை ஏற்படுத்தக்கூடிய அறத்திற்கு புறம்பான செயல்களை செய்ய, எப்போதும் தீய எண்ணங்கள் செயல்பாடு கொண்ட மனிதர்கள் அஞ்சவே மாட்டார்கள். ஆனால் அறச்செயல் புரிந்து அதன்படி வாழும் மேலோர் தீய செயல்களைச் செய்ய மிகவும் அஞ்சுவர். Those who have experience of evil deeds will not fear, but the excellent will fear the pride of sin. |
| 73 | **தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**<br>**கற்றனைத்து ஊறும் அறிவு (396)** |

| | |
|---|---|
| | மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்க்கு நீர் ஊறும், அதுபோல் மக்களின் கற்றக் கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும். Water will flow from a well in the sand in proportion to the depth to which it is dug, and knowledge will flow from a man in proportion to his learning. |
| 74 | **பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**<br>**நன்மை கடலிற் பெரிது (103)**<br><br>இன்ன பயன் கிடைக்கும் என்றுஆராயாமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிட பெரியதாகும். If we weigh the excellence of a benefit which is conferred without weighing the return, it is larger than the sea. |
| 75 | **பல்லார் முனியப் பயனில சொல்லுவான்**<br>**எல்லாரும் எள்ளப் படும் (191)**<br><br>கேட்கும் அனைவரும் வெறுக்கத்தக்க படியான பயன்தராத சொற்களைத் தொடர்ந்து பேசுபவன், அறிவிற் சிறந்த மக்களால் மட்டுமல்லாமல் எல்லோராலும் இகழப்பட்டு, வெறுக்கப்படுவான். He who to the disgust of many speaks useless things will be despised by all. |

| | |
|---|---|
| 76 | **படைகுடி கூழமைச்சு நட்புஅரண் ஆறும்**<br>**உடையான் அரசருள் ஏறு (381)**<br><br>சிறந்த ஆற்றல் மிக்க படைபலம், நல்ல குடிமக்கள், சிறந்த பொருள் வளம், அறிவிற் சிறந்த அமைச்சர்கள், உயர்ந்த குணங்கள் கொண்ட நண்பர்கள், நாட்டை காக்கும் அரண் – ஒரு சிறந்த அரசாங்கத்தின் அங்கங்களான இவை ஆறும் சிறப்பாக பெற்ற ஒரு அரசன் உலகில் இருக்கின்ற அரசர்களுக்கெல்லாம் தலைவனாகவும், சிங்கத்தை ஓத்த கம்பீரத்தை கொண்டவனாகவும் கருதப்படுவான். Who owns them all, a lion lives amid the kings. He who possesses these six things, an army, a people, wealth, ministers, friends and a fortress, is a lion among kings. |
| 77 | **பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே**<br>**நல்லார் தொடர்கை விடல் (450)**<br><br>நல்லவராகிய பெரியாரின் தொடர்பைக் கைவிடுதல் பலருடைய பகையைத் தேடிக்கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமை உடையதாகும். It is tenfold more injurious to abandon the friendship of the good, than to incur the hatred of the many. |
| 78 | **பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**<br>**வெரூஉம் புலிதாக் குறின் (599)** |

| | |
|---|---|
| | யானை பருத்த உடம்பை உடையது, கூர்மையானக் கொம்புகளை உடையது, ஆயினும் ஊக்கமுள்ளதாகியப் புலி தாக்கினால் அதற்கு அஞ்சும். Although the elephant has a large body, and a sharp tusk, yet it fears the attack of the tiger. |
| 79 | **பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்**<br>**மண்புக்கு மாய்வது மன் (996)**<br><br>பண்பு உடையவரிடத்தில் பொருந்தியிருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகின்றது, அஃது இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்து போகும். The (way of the) world subsists by contact with the good; if not, it would bury itself in the earth and perish. |
| 80 | **பண்புஇலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**<br>**கலம்தீமை யால்திரிந் தற்று (1000)**<br><br>பண்பு இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம், வைத்த கலத்தின் தீமையால் நல்ல பால் தன் சுவை முதலியன கெட்டாற் போன்றதாகும். The great wealth obtained by one who has no goodness will perish like pure milk spoilt by the impurity of the vessel. |

| | |
|---|---|
| 81 | **புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**<br>**நட்புஆம் கிழமை தரும் (785)**<br><br>நட்புச் செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை, ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுத்துவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும். Living together and holding frequent intercourse are not necessary (for friendship); (mutual) understanding can alone create a claim for it. |
| 82 | **பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்**<br>**மருளானாம் மாணாப் பிறப்பு (351)**<br><br>உலகில் மெய்ப்பொருள் இல்லாதவற்றை மெய்யென உணர்ந்து நிற்கும் மயக்க உணர்வு மனிதர்களுக்கு இருக்கும் வரை, அவர்கள் இப்பூமியில் மாட்சிமை எனப்படும் பெருமை இல்லாத பிறவிகள் எடுத்து அல்லல்பட நேரும். nglorious births are produced by the confusion (of mind) which considers those things to be real which are not real. |
| 83 | **நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை**<br>**அன்றே ஒழிய விடல் (113)** |

| | |
|---|---|
| | தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவு நிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிட வேண்டும். Forsake in the very moment (of acquisition) that gain which, though it should bring advantage, is without equity. |
| 84 | **நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**<br>**பண்புடை யாளர் தொடர்பு (783)**<br><br>பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருதல், நூலின் நற்பொருள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போன்றதாகும். Like learning, the friendship of the noble, the more it is cultivated, the more delightful does it become. |
| 85 | **நகுதல் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**<br>**மேற்சென்று இடித்தல் பொருட்டு (784)**<br><br>நட்புச் செய்தல் ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழும் பொருட்டு அன்று, நண்பர் நெறிக்கடந்து செல்லும் போது முற்ப்பட்டுச் சென்று இடித்துரைப்பதற்காகும். Friendship is to be practised not for the purpose of laughing but for that of being beforehand in giving one another sharp rebukes in case of transgression. |

| | |
|---|---|
| 86 | **நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி**<br>**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை (789)**<br><br>நட்புக்கு சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும். Friendship may be said to be on its throne when it possesses the power of supporting one at all times and under all circumstances, (in the practice or virtue and wealth). |
| 87 | **நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**<br>**பண்புபா ராட்டும் உலகு (994)**<br><br>நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்லப் பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர். The world applauds the character of those whose usefulness results from their equity and charity. |
| 88 | **நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**<br>**பண்புஉள பாடுஅறிவார் மாட்டு (995)** |

SUCCESS Pathway ACADEMY

| | |
|---|---|
| | ஒருவனை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும், பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிலும் நல்லப் பண்புகள் உள்ளன. Reproach is painful to one even in sport; those (therefore) who know the nature of others exhibit (pleasing) qualities even when they are hated. |
| 89 | **நண்புஆற்றா ராகி நயமில செய்வார்க்கும்**<br>**பண்புஆற்றார் ஆதல் கடை (998)**<br><br>நட்பு கொள்ள முடியாதவராய்த் தீயவைச் செய்கின்றவரிடத்திலும் பண்பு உடையவராய் நடக்க முடியாமை இழிவானதாகும். It is wrong (for the wise) not to exhibit (good) qualities even towards those who bearing no friendship (for them) do only what is hateful. |
| 90 | **நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**<br>**பகலும்பாற் பட்டன்று இருள் (999)**<br><br>பிறரோடு கலந்து பழகி மகிழ முடியாதவர்க்கு, மிகப் பெரிய இந்த உலகம் ஒளியுள்ள பகற் காலத்திலும் இருளில் கிடப்பதாம். To those who cannot rejoice, the wide world is buried darkness even in (broad) day light. |

| | |
|---|---|
| 91 | **நில்லாத வற்றை நிலையின என்றுஉணரும்**<br><br>**புல்லறி வாண்மை கடை (331)**<br><br>உலகின் மனிதர்கள் தாங்கள் பார்க்கின்ற அனைத்தின் பொய் தோற்றத்தையும் கண்டு, மயங்கி நின்று, அதன் ஆழ்ந்த உண்மையைப் பகுத்தாராய்ந்து உணராமல், நிலையில்லாத அனைத்து வகையானவற்றையும் நிலையானவை என நினைக்கும் மனிதர்களின் அறியாமை மிகவும் இழிவு உடையது. That ignorance which considers those things to be stable which are not so, is dishonourable (to the wise). |
| 92 | **நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**<br><br>**பின்நீர பேதையார் நட்பு (782)**<br><br>அறிவுடையவரின் நட்பு பிறை நிறைந்து வருதல் போன்ற தன்மையுடையது, அறிவில்லாதவரின் நட்பு முழுமதி தேய்ந்து பின் செல்லுதல் போன்ற தன்மையுடையன. The friendship of the wise waxes like the new moon; (but) that of fools wanes like the full moon. |
| 93 | **முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்**<br><br>**சார்புஇலார்க்கு இல்லை நிலை (449)** |

| | |
|---|---|
| | முதல் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் இல்லை, அதுபோல் தம்மைத் தாங்கிக் காப்பாற்றும் துணை இல்லாதவர்க்கு நிலைபேறு இல்லை. There can be no gain to those who have no capital; and in like manner there can be no permanence to those who are without the support of adherents. |
| 94 | **முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**<br>**அகம்நக நட்பது நட்பு (786)**<br><br>முகம் மட்டும் மலரும் படியா நட்பு செய்வது நட்பு அன்று, நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு நட்பு செய்வதே நட்பு ஆகும். The love that dwells (merely in the smiles of the face is not friendship; (but) that which dwells deep in the smiles of the heart is true friendship. |
| 95 | **மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**<br>**நோக்கக் குழையும் விருந்து (90)**<br><br>அனிச்சப்பூ மோந்தவுடன் வாடிவிடும்: அதுபோல் முகம் மலராமல் வேறு பட்டு நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பார். As the Anicham flower fades in smelling, so fades the guest when the face is turned away. |

| | |
|---|---|
| 96 | **யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**<br>**அதனின் அதனின் இலன் (341)**<br><br>துறவு எண்ணம் கொண்ட மனிதனானவன் இந்த பூமியில் தனக்கு எது எல்லாம் வேண்டாம் என நினைக்கிறானோ, அதை எல்லாம் விட்டு விலகிச் செல்கிறான். துறவு நிலை கொண்ட மனிதன் எவற்றிடமிருந்தெல்லாம் விலகிச் செல்கின்றானோ, அவற்றால் அவனுக்கு இனி துன்பங்கள் ஏற்படுவதில்லை. Whatever thing, a man has renounced, by that thing; he cannot suffer pain. |
| 97 | **யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**<br>**சாந்துணையும் கல்லாத வாறு (397)**<br><br>கற்றவனுக்கு தன் நாடும் ஊரும் போல வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும் ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன். How is it that any one can remain without learning, even to his death, when (to the learned man) every country is his own (country), and every town his own (town)? |
| 98 | **வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**<br>**பருவந்து பாழ்படுதல் இன்று (83)** |

| | |
|---|---|
| | தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள் தோறும் போற்றுகின்றவனுடைய வாழ்க்கை, துன்பத்தால் வருந்திக் கெட்டுப் போவதில்லை. The domestic life of the man that daily entertains the guests who come to him shall not be laid waste by poverty. |
| 99 | **வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**<br>**குறியெதிர்ப்பை நீரது உடைத்து (221)**<br><br>வறுமை நிலையை அடைந்த மக்களுக்கு எவ்வித பிரதிபலனும் கருதாமல் அவர்களுக்கு ஒன்றை கொடுப்பதே சிறந்த கொடை எனப்படும். பிற எல்லா வகை கொடை செயல்களும் தமக்கென்று ஒரு பிரதிபலனை எதிர்பார்த்து செய்யப்பட்டதாகவே கருதப்படும். To give to the destitute is true charity. All other gifts have the nature of (what is done for) a measured return. |
| 100 | **வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**<br>**உள்ளத்து அனையது உயர்வு (595)**<br><br>நீர்ப்பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவினவாகும், மக்களின் ஊக்கத்தை அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு. The stalks of water-flowers are proportionate to the depth of water; so is men's greatness proportionate to their minds. |

REFERENCE

The Tirukkuṟaḷ or shortly the Kural, is a classic Tamil language text consisting of 1,330 short couplets, or kurals, of seven words each. The text is divided into three books with aphoristic teachings on virtue (aram), wealth (porul) and love (inbam), respectively. The Kural text was authored by Thiruvalluvar. He is known by various other names including Poyyil Pulavar, Mudharpavalar, Deivappulavar, Nayanar, Devar, Nanmukanar, Mathanubangi, Sennabbodhakar, and Perunavalar.

*Karya Etika Tamil Berjudul Thirukkural, Uma Publications 2014.*

*TIRUKURAL English Translation and Commentary by Rev Dr G U Pope, Rev W H Drew, Rev John Lazarus and Mr F W Elli, 1886, Project Madurai 2002.*

*Online version of thirukkural, thirukkural.io.*

*© Dheivegam.com, Thirukkural with meaning in Tamil.*